?????????? ????????? ?????????? ????????????? ?????? ?????????????? ????????? ??????????????! ???? ???????? ??????????

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சியை பிரதிநிதித்துவப் படுத்தி வன்னி மாவட்டத்தில் போட்டியிட இருந்த சட்டத்தரணி தனஞ்சன் தற்போது தான் போட்டியிடப் போவதில்லை என அறிவித்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிடுவது சரியான தீர்மானம் அல்ல என பல அறிவுறுத்தல்கள் தனக்கு கிடைக்கப்பெற்ற நிலையில் இந்த போட்டியிட வேண்டாம் என்ற முடிவினை எடுத்துள்ளதாக சட்டத்தரணி தனஞ்சயன் தனது முகநூல் பக்கத்தின் ஊடாக தெரியப்படுத்தியுள்ளார்.

?????????????? ????? ????????? ?????????????? ???????? ??????????? ?????

?????????? ????????????!

நாட்டில் அரகலய போராட்டம் முன்னெடுக்கப்பட்ட காலப்பகுதியில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மிரிஹான இல்லத்தின் மீதான தாக்குதல்கள் அவரை கொலை செய்யும் நோக்கத்துடனேயே நடத்தப்பட்டதாக அவரது முன்னாள் பிரத்தியேக செயலாளர் சுகீஸ்வர பண்டார தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இல்லத்தின் மீதான தாக்குதல் தொடர்பாக குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் வாக்குமூலம் வழங்கிய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது ” அரகலய போராட்டம் முன்னெடுக்கப்பட்ட காலத்தில் ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்சவுக்கான பாதுகாப்பு கேள்விக் குறியாகவே இருந்தது என்றும் அங்கு வந்திருந்த குழுவினர் கோட்டாபய ராஜபக்ஷவை வெளியேற்றும் நோக்குடன் வரவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

மாறாக அவரை கொலை செய்வதே அவர்களின் நோக்கமாக இருந்ததை தாம் நன்கு அறிவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு வருகை தந்தவர்கள் தொடர்பான அனைத்து தகவல்களும் தன்னிடம் உள்ளதாகவும் எனவே தான் தற்போதைய அரசாங்கம் ஒரு அரசியல் பழிவாங்கல் நோக்குடனேயே தாம் இன்று குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டதாகவும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முன்னாள் பிரத்தியேக செயலாளர் சுகீஸ்வர பண்டார தெரிவித்தார்.

?????????, ??????, ????? ?????????????????? ?????????????? ???????? ???????? ??????????!

???????? ????? ???????

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, பொதுஜன பெரமுன மற்றும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் இருந்து விலகியவர்களை தமது கட்சியுடன் இணையுமாறு பத்தரமுல்ல சீலரத்ன தேரர் அழைப்பு விடுத்துள்ளார்.

நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக சீலரத்ன தேரர் தலைமையிலான ஜனசெத பெரமுன கட்சி இன்று வேட்பு மனுதாக்கல் செய்த போதே பத்தரமுல்ல சீலரத்ன தேரர் ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து தெரிவித்திருந்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது" ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இன்று பிளவடைந்துள்ளது. எனவே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினர்களை எம்முடன் இணையுமாறு அழைப்பு விடுக்கின்றேன்.

அதேபோல் பொதுஜன பெரமுன மற்றும் ரணில்விக்ரமசிங்கவிடம் இருந்து விலகியவர்கள் அனைவரையும் எம்முடன் இணையுமாறு அழைப்பு விடுக்கின்றோம்.
இதேவேளை சர்வதேச நாணய நிதியத்துடனான கொள்கைகளில் எந்தவித மாற்றங்களும் இல்லை என்றே கூறவேண்டும்.

அதாவது 8 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க பின்பற்றியதனையே தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவும் பின்பற்றுகின்றார். இதில் மாற்றம் எதுவும் இல்லை.

நான் ஜனாதிபதியிடும் ஒரு கோரிக்கையினை முன்வைக்கின்றேன். அதாவது சர்வதேச நாணயநிதியத்துடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் அதனை உண்மைத்தன்மையுடன் மக்களுக்கு பகிரங்கபடுத்துங்கள்" இவ்வாறு பத்தரமுல்ல சீலரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

?????????? ????????; 06 ???????
?????????????? ?????????? ????????!

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளாக வேட்புமனு தாக்கல் செய்ய முடியாத அரசியல் கட்சிகளை தேசிய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட புதிய வர்த்தமானியின்படி, கட்சியின் செயலாளர் அலுவலகம் சம்பந்தப்பட்ட சர்ச்சைகள் காரணமாக, 2024 நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில் அரசியல் கட்சிகள் போட்டியிட முடியாது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளாக வேட்புமனுக்களை சமர்ப்பிக்க முடியாத அரசியல் கட்சிகள் பின்வருமாறு;

01. ஈழவர் ஜனநாயக முன்னணி
02. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு
03. எக்சத் லங்கா பொதுஜன கட்சி
04. எக்சத் லங்கா மகா சபா கட்சி
05. லங்கா ஜனதாக் கட்சி
06. இலங்கை முற்போக்கு முன்னணி